**செ. கு. எண்: 193** **நாள் : 18.12.2015**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை –18.12.2015

சென்னை, தண்டையார்பேட்டை நெடுஞ்சாலை, மூலக்கடையைச் சேர்ந்த திரு. மணி என்பவரின் மனைவி திருமதி மஞ்சுளா 17.12.2015 அன்று பெரம்பூர் வட்டம், மூலக்கடை சந்திப்பு அருகே காமராஜர் சாலையில் அரசுப் பேருந்து மோதியதில் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும், திரு லிங்கேசன் என்பவர் இந்த விபத்தில் காயம் அடைந்துள்ளார் என்பதையும் அறிந்து நான் மிகவும் வருத்தம் அடைந்தேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த திருமதி மஞ்சுளாவின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் குடும்பத்திற்கு ஒரு லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்த திரு லிங்கேசன் அவர்களுக்கு ஐம்பது ஆயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**